

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் உரையாற்றினார். உடன் சட்டப்பேரவை முன்னாள் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணி வேந்தன்.எம்.பி., தலைமை கழக பிரதிநிதிகள் சி.வி.எம்.பி.எழிலரசன், டாக்டர் பி.எம்.யாழினி, கோ.கண்ணன், இரா.ராஜசேகர், ஆர்.சிவானந்தம், இரா.ஸ்ரீதரன், கே.வி.ராஜ்குமார், பொன்.முத்து, மு.பெ.கிரி, ஸ்.அம்பேத்குமார்.எம்.எல்.ஏ., பெ.சு.தி.சரவணன், வ.அன்பழகன், ஆர்.வேல்முருகன், ந.பாண்டுரங்கன், க.லோகநாதன், எஸ்.பன்னீர்செல்வம், டி.ஏ.தட்சணாமூர்த்தி, பிரியா.விஜியரங்கன், ஒ.ஜோதி, ப.கார்த்திவேல்மாறன் உட்பட பலர் உள்ளனர்.



விருதுநகர் தெற்கு, வடக்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் அவைத் தலைவர் செல்வமணி, தங்கராஜ் தலைமையில் சரஸ்வதி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தெற்கு மாவட்ட திமுக செயலாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், வடக்கு மாவட்ட திமுக செயலாளர் தங்கம் தென்னரசு ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள். இதில் முன்னாள் எம்.பி.தனுஷ் குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், தங்கப்பாண்டியன், தென்காசி எம்.பி.இராணி ஸ்ரீகுமார், கே.என்.விஜயகுமார், வி.பி.ராஜன், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் கலைக் கதிரவன், சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் கடற்கரைராஜ், மாநில இளைஞர் அணி இன்பரகு, ஒன்றிய செயலாளர் மல்லி ஆறுமுகம், சிவகாசி மாநகரச் செயலாளர் உதயசூரியன், வர்த்தக அணி வனராஜ், இராஜபாளையம் இராஜ அருள்மொழி, மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் ராஜகுரு, கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர். ரமேஷ், மாவட்ட பொருளாளர் சாகுல் ஹமீது, தலைமைச் செயற்குழு சுப்புராஜ், மாவட்ட இளைஞர் அணி கிருஷ்ணகுமார், மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆர்.வி.கே.துரை, இராமமூர்த்தி, விருதுநகர் நகரச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், இளைஞர் அணி ஜெகன் பால்பாண்டி, அதிவீரம்பட்டி செல்வம், மாணவரணி மஞ்சுநாத், கருப்பழகு, பாலமுருகன், ஒன்றிய செயலாளர் பொன்னுத்தம்பி, சந்தானப்பாண்டியன், காரியாபட்டி செந்தில், மந்திரிஓடை கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பு!

சேலம், செப். 5-

சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் இரா.இராஜேந்திரன் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு :-



சேலம் மத்திய மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் தலைமைக் கழக பிரதிநிதி நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் வழக்கறிஞர் கிரிராஜன் அவர்கள் தலைமையிலும், தலைமைக் கழக பிரதிநிதி தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அழகிரி சதாசிவம் அவர்கள் முன்னிலையிலும் மாவட்டக் கழக அலுவலகம் கலைஞர் மாளிகையில் 08.09.2026 செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக செயலாளர்கள், பகுதி கழக செயலாளர்கள், பேரூர் கழக செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்ட மறுசீரமைப்பு பணிகள் குறித்து.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### வாசுதேவநல்லூர் தொகுதி – பெரும்பத்தூர் – கண்டிகை பேரி உள்ளிட்ட பகுதிகளில்

# 30 நாட்டு செங்கல் சூளைகளுக்கு அனுமதி வழங்கிடுக!

## சட்டப்பேரவையில் ஈ.ராஜா வலியுறுத்தல்!

சென்னை, செப். 6-

வாசுதேவ நல்லூர் தொகுதி பெரும்பத்தூர் - கண்டிகை பேரி மற்றும் புன்னை வனப்பேரி கிராமத்தில் சுமார் 30 நாட்டு செங்கல் சூளைகளுக்கு அனுமதி வழங்கிட வேண்டும் என்று சட்டப் பேரவையில் கழக உறுப்பினர் ஈ.ராஜா வலியுறுத்தினார்.

சட்டப் பேரவையில் இதுகுறித்து அவர் பேசியதாவது:-

பேரவைத் தலைவர் அவர்களே, வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சங்கரன்கோவில் வட்டம் பெரும்பத்தூர் கிராமம், கண்டிகைபேரி மற்றும் புன்னை வனப்பேரி கிராமத்தில் செயல்பட்டு வந்த சுமார் 30 நாட்டு செங்கல்சூளைகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. மேற்படி, நாட்டு செங்கல்சூளைகள் அரசு விதிமுறை களுக்குட்பட்டுதான் செயல்பட்டு வந்தது. அதற்கு சுற்றுச்சூழல் துறை மூலமாக அனுமதி வழங்கி, நாட்டு செங்கல்சூளைக்கு அனுமதி வழங்க வேண்டுமென்றும், அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட தாங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.



அமைச்சர் டாக்டர் வே.க.ராஜீவ்: இது மாவட்ட நிர்வாகம் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். செங்கல் சூளை என்பது 3 technique ல்தான் அதை உருவாக்க வேண்டும். முக்கியமாக 800 மீட்டர் தள்ளி வீடுகள் இருக்கக்கூடாது என்று சில வரைமுறைகள் இருக்கின்றன. இரண்டு செங்கல்சூளைகளுக்கு இடையே 1 கி.மீ. distance இருக்க வேண்டும். Furnace இருக்க வேண்டும் என்று சில வழிமுறைகள் இருக்கின்றன. ஆனால், நாட்டு செங்கல்சூளைகள் அந்த வழிமுறைகளைப் பின்பற்றுவதே இல்லை. அப்படி உண்மையாகவே வழிமுறைகளைப் பின்பற்றியிருந்தால் கண்டிப்பாக அவர்களுக்கு இசைவாணை வழங்கப்படும்

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

### கடையநல்லூர் – செங்கோட்டை நகரங்களில்

# போக்குவரத்து காவல் பிரிவை அமைத்திடுக!

## சட்டப் பேரவையில் கடையநல்லூர் தி.மு.இராஜேந்திரன் வலியுறுத்தல்!

சென்னை, செப்.5-

கடையநல்லூர் - செங்கோட்டை நகரங்களில் போக்குவரத்து காவல் பிரிவை அமைத்திட வேண்டும் என்று சட்டப் பேரவையில் தி.மு. இராஜேந்திரன் பேசிய போது குறிப்பிட்டார்.



சட்டப் பேரவையில் அவர் பேசியதாவது:-

பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவின் ஐயப்பன் கோவிலுக்கும், திருக்குற்றால மலை நீர் வீழ்ச்சிக்கும் வருகின்ற பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை ஆண்டிற்கு ஒரு கோடியாகும். அவர்கள் கடந்து செல்கின்ற நகரங்கள், கடையநல்லூர் மற்றும் செங்கோட்டை. இரண்டு நகரங்களிலும் போக்குவரத்து காவல் பிரிவை அமைத்திட வேண்டுமென வலியுறுத்துகிறேன். அதே போல், தமிழ்நாட்டில் 277 காவல் உட்கோட்டங்கள் இருப்பதாக நமது கொள்கை விளக்கக் குறிப்பேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள தொகுதிகள் 234. இதில் மாநகர பகுதியில், சுமார் மாநகர காவல் எல்லைக்குள் 40 சட்டமன்றத் தொகுதிகள் வரக்கூடும். சுமார் 190 தொகுதிகள் ஊரகப் பகுதிகளில் இருக்கின்றன. ஒரு தொகுதிக்கு ஒரு DSP அலுவலகம் என்கிற அளவில், நிர்வாக மறுசீரமைப்பு செய்ய முடியுமா என்பதை அரசு ஆய்வு செய்ய வேண்டும்.

தற்போது உதாரணத்திற்கு புளியங்குடியில் இருக்கிற DSP limit என்பது வாசுதேவநல்லூர் தொகுதி, சங்கரன்கோவில் தொகுதி, கடையநல்லூர் தொகுதியின் ஒரு பகுதியாக அமையப் பெற்றிருக்கிறது. ஆகவே, எந்தளவிற்கு இதில் வாய்ப்பிருக்கிறது என்பதைக் கவனத்தில் கொண்டு ஆய்வு செய்யுமாறு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக கருத்தைப் பதிவு செய்கிறேன்.

இவ்வாறு தி.மு. இராஜேந்திரன் பேசினார்.

### சகோதரரை தாக்கிய வழக்கில்

# புதுச்சேரி நீதிமன்றத்தில் த.வெ.க. அமைச்சர் மரியவில்சன் ஆஜர்!

புதுச்சேரி, செப். 5-

சகோதரர் மற்றும் அவரது குடும்பத்தினரை கொடூரமாக தாக்கிய வழக்கில், உயர்நீதிமன்றத்தின் கண்டனத்தைத் தொடர்ந்து, தமிழ்நாடு நிதியமைச்சர் மரியவில்சன் புதுச்சேரி நீதிமன்றத்தில் ஆஜரானார்.

வீடு புகுந்து தனது சகோதரர் மரிய கிளோத் மற்றும் அவரது மனைவி கேரளின் ஆகிய இருவரையும் தவெக அமைச்சர் மரிய வில்சன் உருட்டுக்கட்டையால் தாக்கி, கொலை மிரட்டல் விடுத்த வீடியோ சமூகவலைத்தளங்களில் வைரலாகியது. இதில், காயமடைந்த மரிய கிளோத் மற்றும் அவரது மனைவி கேரளின் ஆகியோர் லாஸ்பேட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்.

இதன்பேரில் பல்வேறு பிரிவுகளின் கீழ் மரியவில்சன் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கின் விசாரணை புதுச்சேரி முதலாவது குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

பலமுறை வாய்தா வழங்கப்பட்ட போதிலும், அமைச்சர் மரிய வில்சன் தொடர்ந்து நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இழுத்தடித்து வந்தார்.

இதற்கு நீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்தது. மரியவில்சன் தமிழ்நாட்டின் நிதியமைச்சர் மட்டும்தான் என்றும், இங்கிலாந்தின் மன்னர் அல்ல என்றும் நீதிமன்றம் சாடியது. நேரில் ஆஜராக வில்லையென்றால் பிடிவாரண்ட் பிறப்பிக்கப்படும் என்றும் நீதிமன்றம் எச்சரித்தது.

இந்நிலையில், புதுச்சேரி முதலாவது குற்றவியல் நீதிமன்றத்தில் மரிய வில்சன் நேற்று நேரில் ஆஜரானார். அப்போது, வழக்கு தொடர்பான குற்றப் பத்திரிகையை அவர் பெற்றுக் கொண்டார். இதனையடுத்து வழக்கு விசாரணையை, வரும் 9ஆம் தேதிக்கு ஒத்திவைத்து நீதிபதி சந்திரசேகர் உத்தரவிட்டார்.

# தேனி தெற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் அறிக்கை!

தேனி, செப்.5-

தேனி தெற்கு மாவட்டக்கழக செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



தேனி தெற்கு மாவட்டக்கழக தி.மு.க. செயற்குழு கூட்டம் நாளை (06.09.2026 - ஞாயிற்றுக் கிழமை), காலை 10.00 மணிக்கு ஆண்டிபட்டியில் உள்ள மேனகா ஹால், ஐக் கம்பட்டியில் மாவட்டக்கழக அவைத்தலைவர் த. மனோகரன் தலைமையில் தலைமைக்கழக பிரதிநிதிகள் சுபா சந்திரசேகர், கவிஞர் காசி முத்துமாணிக்கம் ஆகியோர் முன்னிலையில் தேனி தெற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெற உள்ளது. அதுசமயம் மாநில நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர், மாவட்டக்கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், கழக பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், பொறுப்பாளர்கள், மாவட்ட அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 22.08.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தலைமை செயற்குழு கூட்டத்தில், கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படி நகர, ஒன்றிய, பேரூர் கழகம் மறு சீரமைப்பு குறித்து.

கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு தேனி தெற்கு மாவட்டக் கழக செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் தா.உதயசூரியன் அறிக்கை!

கள்ளக்குறிச்சி, செப்.5:

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.உதயசூரியன் அறிக்கை வருமாறு :.

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயற்குழு ஆலோசனைக் கூட்டம் நாளை 06-09-2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் கள்ளக்குறிச்சி ராஜா தியேட்டர் பின்புறம் உள்ள கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட கழக அவைத்தலைவர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் தலைமையில், தலைமை கழக பிரதிநிதிகள் ஆர்.டி.அரசு, கே.பி.சங்கர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு கருத்துரை வழங்க உள்ளனர். இக்கூட்டத்திற்கு உளுந்தூர் பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜி.ஆர். வசந்தவேல் மற்றும் கள்ளக்குறிச்சி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் ஆகியோர்கள் முன்னிலை வகிக்கின்றனர்.



அதுசமயம் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்டக்கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. 22-08-2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில், கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின் படி ஒன்றிய, நகர,பேரூர் கழக மறுசீரமைப்பு குறித்தும்,

2. செப் -15 அண்ணா அறிவாலத்தில் நடைபெறும் கழக முப்பெரும் விழா குறித்தும்,

3. கழக ஆக்கப்பணிகள் குறித்தும் ஆலோசிக்கப் பட உள்ளது.

இவ்வாறு அந்த அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.

### எஸ்.அண்டக்குடியிலிருந்து பொன்னையாபுரம் வழியாக – தியாகி

# இம்மானுவேல் சேகரனார் நினைவிடம் வரையுள்ள சாலையை புதுப்பிப்பீர்!

## சட்டப்பேரவையில் கே.கே.கதிவரன் வலியுறுத்தல்!

சென்னை,செப்.5-

சட்டப் பேரவையில் தியாகி இம்மானுவேல் சேகரனார் நினைவிடம் வரையுள்ள சாலையினை புதுப்பித்து தர வேண்டும் என்று பரமக்குடி தொகுதி சட்டமன்ற கழக உறுப்பினர் கே.கே. கதிரவன் வலியுறுத்தினார்.



சட்டப் பேரவையில் அவர் பேசியதாவது:-

பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை பேரவையின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

பரமக்குடியில் இந்திய சுதந்திரப் போராட்ட வீரர், சமூக நீதிப் போராளி தியாகி இம்மானுவேல் சேகரனாருடைய குரு பூஜை விழா செப்டம்பர் 11 அன்று நடைபெறவுள்ளது. நடைபெறவுள்ள குரு பூஜை விழாவிற்கு சுற்றுவட்டாரத்திலிருந்து பொதுமக்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் சமுதாயத் தலைவர்கள் எல்லாம் கலந்துகொள்வார்கள். பொதுமக்கள் எல்லாம் வரக்கூடிய அந்த சாலை அதாவது, அண்டக்குடி ஊராட்சியிலிருந்து, பொன்னையாபுரத்திலிருந்து நினைவிடம் வரக்கூடிய அந்தச் சாலையும், சந்தைப்பேட்டையிலிருந்து வரக்கூடிய சாலையும் புதுப்பித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இலட்சக்கணக்கான மக்கள் அந்த நிகழ்வில் கலந்து கொள்வார்கள். அவர்களுக்கு குடிநீர் வசதியும், தற்காலிக கழிப்பிட வசதியும் செய்து தரவேண்டும். இன்னொரு பிரச்சினை இருக்கிறது. அந்த நிகழ்விற்கு கிராமங்களில் இருந்து வரக்கூடிய வாகனங்களுக்கு அனுமதி கொடுப்பதிலே காவல் துறையில் கொஞ்சம் பிரச்சினை இருக்கின்றது.

அந்த அனுமதியைக் கொடுப்பதில் ஏனென்றால் மக்கள் அனைவரும் அச்சப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். எனவே, எளிய முறையில் அனுமதி கிடைக்கும்வகையில் அந்த நடைமுறையைச் செயல்படுத்துமாறு அவையின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.

அமைச்சர் அவர்களுக்கு ஒன்றை தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் சொல்கிற ஏனைய நிகழ்வுகள் எல்லாம் அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நான் சொல்வது எஸ். அண்டக்குடி ஊராட்சியிலிருந்து பொன்னையாபுரம் வழியாக தியாகி இம்மானுவேல் சேகரனார் நினைவிடம் வரக்கூடிய அந்தச் சாலையாகும். அந்தச் சாலையில்தான் நீங்கள் அமைச்சர் பெருமக்களாக இருந்தாலும் சரி, சமுதாயத்தினுடைய தலைவராக இருந்தாலும் சரி, பொதுமக்கள் அந்த நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திவிட்டு, அதன் வழியாகத்தான் நாம் வெளியேறி நான்கு வழிச் சாலையைக் கடந்து செல்லமுடியும். அந்தச் சாலை குறித்து நான் BDO தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு பேசினேன். அதற்கு estimate போடப்பட்டுள்ளது. சென்ற வாரம் அதற்கான பணிகள் செய்யப்படும் என்று சொன்னார்கள். இப்போது தொலைபேசியில் தொடர்புகொண்ட போது, estimate போடப்பட்டுள்ளது நாங்கள் பணிகளைச் செய்துவிடுவோம் என்று சொல்கின்றார். என்னுடைய சட்டமன்றத் தொகுதி சார்ந்தது அது. பொதுமக்கள் சமுதாயத்தின் முக்கிய தலைவர்கள் அனைவரும் என்னை தொலைபேசியில் தொடர்புகொண்டு நீங்கள் பேசினீர்களா, அந்தப் பணிகள் இன்னும் செய்யவில்லை என்று கேட்கிறார்கள். அதனால்தான் நான் காலையில்கூட எங்கள் கொறடா அவர்களிடம் தெரிவித்து, இதை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். விரைவாக அந்தச் சாலையை அமைத்துத்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.